Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 232/18

**Deposition of P.W.10**

| | | |
|---|---|---|
| Name | : | சாந்தி |
| Husband's Name | : | ராஜேந்திரன் |
| Village | : | அனவயல் |
| Taluk | : | ஆலங்குடி |
| Caste | : | |
| Calling | : | தூய்மைக்காவலர் |
| Religion | : | இந்து |
| Age | : | **41/2021** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 27.8.21**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது அனவயல் கிராமத்தில் வசித்து தூய்மைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த **22.7.2018**ம் மாலை **3-3.15** மணியளவில் நான் வீட்டில் இருந்தேன். என் மகன் பிரபாகரன் அ.சா**8** எனக்கு போன் செய்தார். நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். மாங்காடு பூச்சிக்கடை அருகே விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். என் மகன் பிரகாஷ்க்கு அடிப்பட்டு காதில் இரத்தம் வந்திருந்தது. அவருடன் சென்ற மற்றொரு நபருக்கும் காயம் ஏற்பட்டு இரண்டு நபர்களும் சம்பவ இடத்திலேயே இறந்து கிடந்தனர். என் மகன் மேற்கிலிருந்து கிழக்காக தனது இருசக்கர வாகனத்தில் சென்றுள்ளார். எதிரே வந்த வெள்ளைநிற கார் மோதி விபத்து ஏற்படுத்தியதாக சொன்னார்கள். புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக கொண்டு சென்றோம். அங்கு இறந்தவர்களின் பிரேதத்தின் மீது வடகாடு போலீசார் பிரேத விசாரணை செய்தனர். நான் தெரிந்த சம்பவம் கூறினேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் கு.வி.</u>

நான் கேள்விப்பட்டுதான் சம்பவ இடம் சென்றேன். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் கேள்விப்பட்டதுபோல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.
ம.வி. இல்லை

ம.வி இல்லை

Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 232/18

**Deposition of P.W.9**

| | | |
|---|---|---|
| Name | : | ராஜேந்திரன் |
| Father's Name | : | அடைக்கலம் |
| Village | : | அனவயல் |
| Taluk | : | ஆலங்குடி |
| Caste | : | |
| Calling | : | கூலிவேலை |
| Religion | : | இந்து |
| Age | : | 42 **/2021** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 27.8.21**

**முதல் விசாரணை**

நான் தற்போது அனவயல் கிராமத்தில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். கடந்த **22.7.2018**ம் மாலை **3** மணியளவில் கைகாட்டியில் விவசாய வேலை செய்து கொண்டிருந்தேன். மாங்காடு பூச்சிக்கடை அருகே உள்ள தேங்காய் வியாபாரி போன் செய்து என் மகன் பிரகாஷ் மற்றும் அவருடன் பயணம் செய்த பாலமுருகன் மேற்கிலிருந்து கிழக்காக தனது ஸ்பிளண்டர் பிளஸ் என்ற இருசக்கர வாகனத்தில் சென்றபோது எதிரே வந்த வெள்ளைநிற கார் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் வந்து மோதி விபத்து ஏற்படுத்தி அதில் என் மகனுக்கு வலது காதில் இரத்தம் வந்தும் கால்முட்டு உடைந்தும் சம்பவ இடத்திலேயே இறந்து கிடந்தார். என் மகனுடன் சென்ற பாலமுருகன் என்பவருக்கு தலை மற்றும் கால்களில் காயம் ஏற்பட்டு அவரும் சம்பவ இடத்திலேயே இறந்து கிடந்தார். நான் கேள்விப்பட்டு சம்பவ இடம் சென்று பார்த்தேன். புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக கொண்டு சென்றோம். அங்கு இறந்தவர்களின் பிரேதத்தின் மீது வடகாடு போலீசார் பிரேத விசாரணை செய்தனர். நான் தெரிந்த சம்பவம் கூறினேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி.**

நான் கேள்விப்பட்டுதான் சம்பவ இடம் சென்றேன். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் கேள்விப்பட்டதுபோல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**ம.வி. இல்லை**

Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 232/18
**Deposition of P.W.8**

| | | |
|---|---|---|
| Name | : | பிரபாகரன் |
| Father's Name | : | ராஜேந்திரன் |
| Village | : | அனவயல் |
| Taluk | : | ஆலங்குடி |
| Caste | : | |
| Calling | : | சுயதொழில் |
| Religion | : | இந்து |
| Age | : | 21 **/2021** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 27.8.21**

**முதல் விசாரணை**

நான் தற்போது அனவயல் கிராமத்தில் வசித்து சுயதொழில் செய்து வருகிறேன். கடந்த **22.7.2018**ம் மாலை **3.30** மணியளவில் கைகாட்டியிலுள்ள மெக்கானிக் செட்டில் வேலை செய்து கொண்டிருந்தேன். மாங்காடு பூச்சிக்கடை அருகே என் தம்பி பிரகாஷ் மேற்கிலிருந்து கிழக்காக தனது ஸ்பிளண்டர் பிளஸ் என்ற இருசக்கர வாகனத்தில் சென்றபோது எதிரே வந்த கார் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் வந்து மோதி விபத்து ஏற்படுத்தி அதில் என் தம்பிக்கு வலது காதில் இரத்தம் வந்தும் கால்முட்டு உடைந்தும் சம்பவ இடத்திலேயே இறந்து கிடந்தார். என் தம்பியுடன் சென்ற பாலமுருகன் என்பவருக்கு தலை மற்றும் கால்களில் காயம் ஏற்பட்டு அவரும் சம்பவ இடத்திலேயே இறந்து கிடந்தார். நான் கேள்விப்பட்டு சம்பவ இடம் சென்று பார்த்தேன். நான் வீட்டிலிருப்பவர்களுக்கு தகவல் சொன்னேன். விபத்து ஏற்படுத்திய டாடா இண்டிகா காரை அற்புதராஜ் என்பவர் ஓட்டிவந்ததாக கேள்விப்பட்டேன். புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக கொண்டு சென்றோம். அங்கு இறந்தவர்களின் பிரேதத்தின் மீது வடகாடு போலீசார் பிரேத விசாரணை செய்தனர். நான் தெரிந்த சம்பவம் கூறினேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி.**

நான் கேள்விப்பட்டுதான் சம்பவ இடம் சென்றேன். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் கேள்விப்பட்டதுபோல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**ம.வி. இல்லை**